மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள், 3.6.2013 அன்று திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்ற அரசு விழாவில் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், முடிவுற்ற திட்டப் பணிகளைத் தொடங்கி வைத்தும் மற்றும் அரசு நலத் திட்ட உதவிகளை வழங்கியும் ஆற்றிய விழாப் பேருரை:-

---

இந்த இனிய விழாவிற்கு தலைமை ஏற்றுள்ள மாண்புமிகு சட்டமன்ற பேரவைத் தலைவர், அன்புச் சகோதரர் திரு. தனபால் அவர்களே!

இந்த இனிய விழாவில் முன்னிலை உரை ஆற்றிய மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அன்புச் சகோதரர் திரு. பழனியப்பன் அவர்களே!

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அன்புச் சகோதரர் திரு. தங்கமணி அவர்களே!

மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் அன்புச் சகோதரர் திரு. பூனாட்சி அவர்களே!

அரசு தலைமைக் கொறடா அன்புச் சகோதரர் திரு. மனோகரன் அவர்களே!

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!

நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே!

வரவேற்புரை ஆற்றிய திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ஜெயஸ்ரீ முரளிதரன் அவர்களே!

நன்றியுரை ஆற்றவுள்ள திருச்சிராப்பள்ளி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திரு. கோ. இராதா அவர்களே!

வணக்கத்திற்குரிய பெரியோர்களே!

என்னை வாழ வைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே!

இதயதெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் ரத்தத்தின் ரத்தமான, என் உயிரினும் மேலான எனது அருமை உடன்பிறப்புகளே!

உங்கள் அனைவருக்கும் எனது அன்பு கலந்த வணக்கத்தை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். சிற்பக் கலையின் சிகரமாகவும்; வழிபாட்டுத் தலங்களின் இருப்பிடமாகவும்; அறிஞர்கள் மற்றும் சான்றோர்களின் பிறப்பிடமாகவும் திகழ்கின்ற திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கு உட்பட்ட ஸ்ரீரங்கம் தொகுதியில் நடைபெறும் இந்த இனிய அரசு விழாவிலே பங்கேற்று; என் அன்பிற்குரிய மக்களாகிய உங்களை காணவும்; உங்களுடன் சில கருத்துகளைப் பரிமாறவும்; 41 கோடியே 98 லட்சத்து 62 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான முடிவுற்ற பணிகளைத் தொடங்கி வைத்து; 1,752 கோடியே 69 லட்சத்து 65 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டி; 59 கோடியே 76 லட்சத்து 93 ஆயிரத்து 140 ரூபாய் மதிப்பிலான நலத் திட்ட உதவிகளை ஒரு லட்சத்து 40 ஆயிரத்து 2 பயனாளிகளுக்கு வழங்கவும் இன்று வாய்ப்பு கிடைத்தது குறித்து நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். அதாவது 1,854 கோடியே 45 லட்சத்து 20 ஆயிரத்து 140 ரூபாய் மதிப்பிலான பணிகளும், நலத் திட்ட உதவிகளும் இன்று செயல்படுத்தப்படுகின்றன, வழங்கப்படுகின்றன.

தமிழகத்தில் இல்லாமை இல்லாத நிலை உருவாக வேண்டும் என்பதன் அடிப்படையிலும்; மனித வளம் சிறப்புற மேம்பாடு அடைய வேண்டும் என்ற அடிப்படையிலும்; உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டும் என்பதன் அடிப்படையிலும்; தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சியில் அனைத்துப் பிரிவினரும் உரிய பங்கினை பெற வேண்டும் என்ற அடிப்படையிலும்; பல்வேறு திட்டங்கள் எனது தலைமையிலான அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்த துறைகள்; தொழில் துறை; சேவை துறை என அனைத்திலும் தமிழகம் முதல் நிலை அடைவதற்கான புதிய திட்டங்களையும் எனது அரசு செயல்படுத்தி வருகிறது. குழந்தைகள், மாணவ–மாணவியர், தாய்மார்கள், பழங்குடியினர், ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர், இளைஞர்கள், தொழில் முனைவோர், தொழிலாளர்கள், விவசாயிகள், முதியோர் என அனைத்து தரப்பினரும் பயனடையும் வண்ணம் பல்வேறு புதிய புதிய திட்டங்களை நான் அறிவித்து வருகிறேன்.

இது மட்டுமன்றி, பொது மக்களின் வேண்டுகோள், சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகள் ஆகியவற்றை கவனமுடன் பரிசீலித்து சட்டமன்றம் நடைபெறும் போது, சட்டமன்ற விதி 110–ன் கீழ் மக்கள் நலனுக்கான பல்வேறு திட்டங்களை நான் அறிவித்து வருகிறேன். இதைக் கண்டு பொறுத்துக் கொள்ள முடியாத திமுக தலைவர் திரு. மு. கருணாநிதி, இவை எல்லாம் ‘‘வெறும் அறிவிப்புகள்’’ என்று குதர்க்கமாக தெரிவித்தார். சட்டமன்றத்திலேயே இதைப் பற்றி நான் விளக்கம் அளித்து, 2011, 2012 ஆகிய இரண்டு ஆண்டுகளில் சட்டமன்ற பேரவை விதி 110–ன் கீழ் என்னால் செய்யப்பட்ட 136 அறிவிப்புகளில் 127 அறிவிப்புகள் மீது, முழுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன எனக் கூறி ஒரு சில உதாரணங்களையும் எடுத்துக் கூறினேன்.

அதன் பிறகு, திமுக தலைவர் திரு.கருணாநிதி தன் நிலையை தலை கீழாக மாற்றி, ‘‘முதலமைச்சரோ, அமைச்சரோ பேரவையில் அறிவித்து விட்டால், அவைகளை நடைமுறைப் படுத்தித் தான் ஆக வேண்டும். இல்லாவிட்டால், ‘உறுதிமொழிக் குழு’ கேள்வி எழுப்பும்’’ என்று கூறி, இவை எல்லாம் செயல்படுத்தப்படும் அறிவிப்புகள் தான் என்பதை ஒப்புக்கொண்டுள்ளார். அவரது மைந்தர், திரு.மு.க.ஸ்டாலின் இது 110 ஆட்சி என்று கூறி, இதில் ஐம்பது சதவீதமாவது நிறைவேற்ற முடியுமா என்று கேள்வி கேட்கிறார். இதில் எதையுமே நிறைவேற்ற முடியாது என்று பொருள்படவும் பேசி மக்களை ஏமாற்றி வருகிறார். விதி 110–ன் கீழ் வெளியிடப்படும் அறிவிப்புகள் மக்களுக்கு மிகுந்த பயன் அளிப்பதாக இருப்பதால், அதைப் பற்றி முன்னுக்குப் பின் முரணாக பேசி இவர்கள் மக்களை ஏமாற்றி வருகிறார்கள்.

இதை நினைக்கும் போது எனக்கு ஒரு ரஷ்யக் கதை நினைவிற்கு வருகிறது.

ஒரு பெரிய நினைவு மண்டபம் முன்பு தந்தையும் மகனும் நின்று கொண்டிருந்தார்கள். அந்த வழியாக சென்றவர்கள் அனைவரும் ‘‘அது என்ன மண்டபம்?’’ என்று விசாரித்தார்கள். ‘‘இந்த இடத்தில் ஒரு பெரிய மகான் சமாதி ஆகியிருக்கார். அதை நினைவு மண்டபமாக கட்டி இருக்கிறோம். இந்த இடத்தில் உட்கார்ந்தாலே மன நிம்மதி கிடைக்கும்’’ என்று சொன்னார்கள். அங்கு ஒரு உண்டியலையும் வைத்தார்கள். இதை உண்மை என்று நம்பி அந்த வழியாக செல்பவர்கள் அங்கு சிறிது நேரம் உட்கார்ந்து விட்டு அந்த உண்டியலில் காசையும் போட்டார்கள். பணம் நிறைய சேர்ந்தது. தந்தைக்கும், மகனுக்கும் தகராறு வந்தது.

தந்தை மகனைப் பார்த்து, ''நாம் சண்டை போட்டால் மற்றவர்கள் நம்மை தவறாக நினைப்பார்கள். எனவே, நான் உனக்கு ஒரு கழுதையையும், பணத்தையும் தருகிறேன். இதை வைத்து நீ தனியாக பிழைத்துக் கொள்'' என்றார்.

மகனும் அதற்கு சம்மதம் தெரிவித்து, கழுதையை அழைத்துக் கொண்டு அடுத்த ஊருக்கு சென்றான். வழியிலேயே அந்தக் கழுதை இறந்து விட்டது. உடனே மகனுக்கு ஒரு யோசனை பிறந்தது. அந்தக் கழுதையை சாலை ஓரத்தில் புதைத்தான். கையிலே இருந்த பணத்தை வைத்து அந்த இடத்தில் ஒரு சிறிய மண்டபம் கட்டினான். அந்த வழியாக செல்பவர்களிடம் இது ஒரு பெரிய மகானின் சமாதி என்று வழக்கம் போல கூறினான். கூட்டம் சேர ஆரம்பித்தது. உண்டியலில் பணமும் சேர்ந்தது. தந்தையை விட மகன் பெரிய ஆளாகி விட்டான்.

மகனின் வளர்ச்சியை கேள்விப்பட்ட தந்தை, ஒரு நாள் மகனைப் பார்க்கச் சென்றார். மகனைப் பார்த்து, ''எப்படி இவ்வளவு பணம் சம்பாதித்தாய்?'' என்று வினவினார். அதற்கு மகன், ''எல்லாம் உங்க ஆசீர்வாதம்'' என்று கூறினான்.

'அது எப்படி?' என்று கேட்டார் தந்தை.

அதற்கு மகன், ''நீங்க கொடுத்த கழுதை இறந்து விட்டது. அதை இங்கு புதைத்து, நீங்க கொடுத்த பணத்தை வைத்து மண்டபம் கட்டினேன். இது ஒரு பெரிய மகானின் சமாதி என்று அனைவரிடமும் கூறினேன். ஒரு உண்டியலையும் வைத்தேன். மக்களும் அதை உண்மை என்று நம்பி காசை கொட்ட ஆரம்பித்தார்கள். நான் பணக்காரனாகி விட்டேன்'' என்று தந்தையிடம் கூறினான்.

உடனே தந்தை, ''இப்ப தான்டா நீ என் பிள்ளை'' என்று மகனிடம் சொல்லி மகிழ்ச்சி அடைந்தார்.

''ஏன் இப்படி சொல்கிறீர்கள்?'' என்று மகன் தந்தையிடம் வினவினான்.

அதற்குத் தந்தை, ''நீ இப்ப கழுதைக் குட்டியை புதைத்து மண்டபம் கட்டியிருக்கே. நம்ம ஊரில் நாம் கட்டி இருக்கிறோமே அந்த மண்டபம் அது இந்தக் கழுதைக் குட்டியோட தாயை புதைத்த இடம். அது ஒரு மகானின் சமாதி என்று அப்பகுதி மக்களிடம் பொய் சொல்லி தான் காசு சம்பாதித்து கொண்டு இருக்கிறேன்'' என்று மகனிடம் கூறினார்.

இதைப் போலத் தான் இந்த அரசைப் பற்றி, அரசின் திட்டங்களைப் பற்றி, முன்னாள் முதலமைச்சர் திரு.மு.கருணாநிதியும், அவரது மகன் திரு.மு.க.ஸ்டாலினும் மனம் போன போக்கில் அவதூறுகளை பேசி வருகின்றனர்.

இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக தமிழகத்தை ஆக்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில், நான் முனைப்புடன் செயல்பட்டு வந்தாலும்; என் மீது அளவு கடந்த பாசத்தை பொழியும் உங்களைச் சந்திப்பதும்; தேர்தல் நேரத்தில் உங்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதும் தான் என் தலையாயக் கடமை என்று கருதி, நான் தற்போது நான்காவது முறையாக இன்று உங்கள் முன் உரையாற்றுகிறேன்.

19.6.2011 அன்று இங்கு நான் முதன் முதலாக வந்த போது, 190 கோடியே 18 லட்சம் ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினேன். இதனைத் தொடர்ந்து 13.2.2012 அன்று 160 கோடியே 21 லட்சம் ரூபாய் மதிப்பிலான திட்டங்களுக்கும்; 13.9.2012 அன்று 82 கோடியே 63 லட்சம் ரூபாய் மதிப்பிலான திட்டங்களுக்கும் நான் அடிக்கல் நாட்டியுள்ளேன். இதுவரை என்னால் அடிக்கல் நாட்டப்பட்டுள்ள 433 கோடியே 3 லட்சம் ரூபாய் மதிப்பிலான திட்டங்களில், 65 கோடியே

3 லட்சம் ரூபாய் மதிப்பிலான திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு ஏற்கெனவே என்னால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் நான் இங்கு வந்த போது, 25 ஏக்கர் பரப்பில் தேசிய சட்டப் பள்ளி அமைப்பதற்கான அடிக்கல்லை நாட்டினேன். இந்தப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. தற்போதுள்ள கட்டமைப்பு வசதிகளைக் கொண்டு, முதல் ஆண்டிற்கான வகுப்புகள் நடப்பு ஆண்டிலேயே துவங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

41 கோடியே 98 லட்சத்து 62 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான முடிவுற்ற பணிகளை இன்று திறந்து வைத்ததில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இவற்றில் முக்கியமான சிலவற்றை இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

காவிரி நதியில் புனித நீராடி, ஸ்ரீரங்கம் ரங்கநாதசுவாமி கோயிலுக்கு நடை பயணமாக செல்லும் பக்தர்களின் வசதிக்காக, அம்மா மண்டபம் முதல் ரங்கநாதசுவாமி கோயில் வரை ஒரு கோடி ரூபாய் மதிப்பில் சாலை ஓரத்தில் மேற்கூறையுடன் கூடிய நடைபாதை;

சோமரசம்பேட்டை, மரவனூர், இனாம்குளத்தூர், நாகமங்கலம் மற்றும் அந்தநல்லூர் ஆகிய இடங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ஒரு கோடியே 69 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட சொந்த கட்டடங்கள்;

ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனையில் 2 கோடியே 15 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள குளிர்சாதன வசதியுடன் கூடிய பிரசவ வார்டு; பேறுகால நிலையம்; மற்றும் அறுவை சிகிச்சை அரங்கம்;

1 கோடியே 6 லட்சத்து 64 ஆயிரம் ரூபாய் செலவில் அந்தநல்லூர், அளுந்தூர், நவலூர் குட்டப்பட்டு மற்றும் குழுமணி அகிய இடங்களில் கட்டப்பட்டுள்ள புதிய கால்நடை மருந்தகக் கட்டடங்கள்;

ஸ்ரீரங்கம் தாலுக்காவில் அமைந்துள்ள வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திலும்; மகளிர் தோட்டக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திலும்; ஒரு கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள கலையரங்கம்;

ஸ்ரீரங்கம் அம்மா மண்டபம் சாலையில் அமைக்கப்பட்டுள்ள அம்மா உணவகம்;

ஸ்ரீரங்கம், ஷிவானி தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு திறந்தவெளி பல்கலைக்கழகத்தின் மண்டல மையம்;

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் 4 கோடியே 83 லட்சம் ரூபாய் செலவில் அந்தநல்லூர், மணிகண்டம் மற்றும் மணப்பாறை ஊராட்சி ஒன்றியங்களில் அமைக்கப்பட்டுள்ள 50 தனி விசை மின் திட்டங்கள்; தடுப்பணைகள்; குடிநீர் திட்டங்கள்; சிறு மின் விசைத் திட்டம் மற்றும் மேல் நீர்த் தேக்கத் தொட்டி;

கிராமப்புற பகுதிகளில் உள்ள படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்த மேம்படுத்தப்பட்ட ஊரக வெளிப்பணி, அதாவது, Rural Business Process Outsourcing;

ஸ்ரீரங்கம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட ஊரகப் பகுதிகளில், 26 கோடியே 35 லட்சத்து 86 ஆயிரம் ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப்பட்ட குடிநீர் வசதி; தார் சாலைகள்; சிமெண்ட் சாலைகள்; தெரு விளக்குகள்; மயான மேம்பாட்டுப் பணிகள்; பொது விநியோகக் கடைகள்; பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாடு; புதிய அங்கன்வாடி மையக்

கட்டடங்கள் போன்ற **923** முடிவுற்ற பணிகள் உட்பட பல்வேறு திட்டங்கள் என்னால் இன்று மக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டுள்ளன.

இந்த இனிய விழாவில் **1,752** கோடியே **69** லட்சத்து **65** ஆயிரம் ரூபாய் மதிப்பிலான பணிகளுக்கு இன்று நான் அடிக்கல் நாட்டியுள்ளேன் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். அவற்றில் முக்கியமான ஒரு சில பணிகளை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

மாநிலத்தில் புதிய தொழிற்சாலைகள் எங்கு ஏற்படுத்தப்படுகின்றனவோ; அந்தப் பகுதிகள் விரைந்த வளர்ச்சியை அடைகின்றன. தொழிற்சாலைகள் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதோடு மட்டுமல்லாமல் அதனோடு இணைந்த உப தொழில்களை பெருக்குவதற்கும்; அந்தப் பகுதியின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கும்; உறுதுணையாக உள்ளன. எனவே, பெரிய தொழிற்சாலைகள் இல்லாத ஸ்ரீரங்கம் சட்டமன்ற தொகுதியில் புதிய தொழிற்சாலைகள் அமைக்கப்பட வேண்டும் என்பது எனது விருப்பம் ஆகும். இதன் அடிப்படையில், மணப்பாறை வட்டத்தில் **1077** ஏக்கர் நிலப்பரப்பில் **107** கோடி ரூபாய் மதிப்பில் புதியதாக தொழில் பூங்கா அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் **3000** கோடி ரூபாய்க்கான மூலதனம் ஈர்க்கப்பட்டு **25000** பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். இங்கு தொழில் தொடங்கும் நிறுவனங்களுக்கு அவை மேற்கொள்ளும் மூலதனத்தின் அடிப்படையில் **45** லட்சம் ரூபாய் முதல் **2** கோடியே **25** லட்சம் ரூபாய் வரை மூலதன மானியம் வழங்கப்படும். இதுவன்றி, அரசுக்கு செலுத்திய வரியை திருப்பி அளித்தல்; கழிவு நீர் சுத்திகரிப்பு நிலைய ஊக்க உதவி; தொழிலாளர் பயிற்சிக்கான ஊக்க உதவிகள் ஆகியவையும் வழங்கப்படும். மேலும் தொழில் முனைவோருக்கு வெளிச் சந்தையை விட **3** சதவீதம் குறைந்த வட்டியில் TIIC மூலம் கடன் வழங்க வழிவகை செய்யப்படும்.

ஸ்ரீரங்கம் மற்றும் மணப்பாறை வட்டங்களின் தொழில் வளர்ச்சிக்காக, தமிழ்நாடு செய்தித் தாள் காகித நிறுவனம் மூலம் ஒரு மிகப் பெரும் தொழிற்சாலை துவங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். குளித்தலை-மணப்பாறை மாநில நெடுஞ்சாலையை ஒட்டியுள்ள மொண்டிப்பட்டி, கே. பெரியப்பட்டி வடக்கு மற்றும் செட்டிசத்திரம் வருவாய் கிராமங்களில் ஆண்டொன்றுக்கு **2** லட்சம் டன் திறன் கொண்ட இரு புறமும் மேற்பூச்சு செய்யப்பட்ட அடுக்கு காகித அட்டை, அதாவது, Multi Layer double coated board தயாரிக்கும் ஆலை சுமார் **1200** கோடி ரூபாய் செலவில் நவீன இயந்திர வசதிகளுடன் நிறுவப்படும் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் **2000** பேர்களுக்கு நேர்முக மற்றும் மறைமுக வேலை வாய்ப்புகள் உருவாகும். மேலும் வறட்சியான இந்தப் பகுதியின் பொருளாதாரம் மேம்படும்.

மேலும், ஸ்ரீரங்கம் வட்டம், சேதுராப்பட்டி கிராமத்தில் **128** கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்திய தகவல் தொழில் நுட்பக் கழகம், **13.20** ஏக்கர் நிலப்பரப்பில் **60** கோடியே **84** லட்சம் ரூபாய் செலவில் அரசு பொறியியல் கல்லூரி; **5** ஏக்கர் நிலப்பரப்பில் **37** கோடியே ஒரு லட்சம் ரூபாய் செலவில் பலவகை தொழில் நுட்பக் கல்லூரி ஆகியவற்றிற்கும் நான் இன்று அடிக்கல் நாட்டியுள்ளேன்.

இவையன்றி, அருள்மிகு ரங்கநாதசுவாமி திருக்கோயிலின் ஏழு பிரகாரங்களில் **5, 6,** மற்றும் **7**–ஆம் பிரகாரங்களில் சிதிலம் அடைந்துள்ள **5373** மீட்டர் நீளமுள்ள சுற்றுச் சுவரை **33** கோடியே **18** லட்சம் ரூபாய் செலவில் சீரமைக்கும் பணி;

ஸ்ரீரங்கம் மேல வாசலில் உள்ள வில்வ தீர்த்தக் குளம் உள்ளிட்ட 6 தீர்த்த குளங்களை 73 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் மதிப்பில் புனரமைக்கும் பணி;அருள்மிகு ரங்கநாதசுவாமி திருக்கோயிலின் நந்தவனத்தைச் சுற்றி 17 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் செலவில் சுற்றுச் சுவர் அமைக்கும் பணி;

ஸ்ரீரங்கம் அருள்மிகு ரங்கநாதசுவாமி திருக்கோயில் வளாகத்தில் 5 கோடி ரூபாய் செலவில் நாலாயிர திவ்யப் பிரபந்த பாடல்கள் அடங்கிய கல்வெட்டு நந்தவனம்; 60 லட்சம் ரூபாய் செலவில் அன்னதான காத்திருப்புக் கூடம்;

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் 2 கோடியே 63 லட்சம் ரூபாய் செலவில் அந்தநல்லூர், மணிகண்டம் மற்றும் மணப்பாறை ஊராட்சி ஒன்றியங்களில் பல்வேறு குடிநீர்த் திட்டங்கள்;

கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே 81 கோடி ரூபாய் செலவில் மேம்பாலம் கட்டுதல்; 16 கோடியே 2 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட உள்ள 763 பசுமை வீடுகள்; 6 கோடியே 45 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட உள்ள 538 தொகுப்பு வீடுகள்;

ஸ்ரீரங்கம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட ஊரகப் பகுதிகளில் 58 கோடியே 81 லட்சத்து 52 ஆயிரம் ரூபாய் செலவில் குடிநீர் வசதி; தெரு விளக்குகள் அமைத்தல்; சிமெண்ட் சாலைகள் அமைத்தல்; சாலைகள் மற்றும் பாலங்கள் கட்டுதல் போன்ற பல்வேறு அடிப்படைப் பணிகள் உட்பட பல்வேறு திட்டங்களுக்கு இன்று நான் அடிக்கல் நாட்டியுள்ளேன்.

மேலும், 59 கோடியே 76 லட்சத்து 93 ஆயிரத்து 140 ரூபாய் மதிப்பிலான நலத் திட்ட உதவிகள் ஒரு லட்சத்து 40 ஆயிரத்து 2 பயனாளிகளுக்கு இன்று வழங்கப்பட உள்ளன. இவர்களில் 16 பேருக்கான நலத் திட்ட உதவிகளை இந்த மேடையில் நான் வழங்க உள்ளேன். மற்ற பயனாளிகளுக்கு அமைச்சர் பெருமக்கள் மற்றும் அரசு அலுவலர்கள் நலத்திட்ட உதவிகளை இன்றே வழங்குவார்கள்.

நமது லட்சியம் உயர்வானது! நமது பார்வை தெளிவானது! நமது வெற்றி முடிவானது! உங்கள் ஆதரவோடு நாளைய பாரதம் நமது கையில் என்று கூறி, சீரோடும் சிறப்போடும் நடந்தேறிய இந்த விழாவிற்கு வருகை தந்து, உற்சாகத்தோடு கலந்து கொண்ட உங்கள் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துகளையும், நன்றியினையும் தெரிவித்துக் கொண்டு,

அண்ணா நாமம் வாழ்க!
புரட்சித் தலைவர் நாமம் வாழ்க!

என்று கூறி, விடை பெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

* * * * * * *

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை.9**